

# தொழுகை

## ஆரம்ப நிலையிலுள்ள முஸ்லிம்களுக்கான தொழுகை வழிகாட்டல் நூல்

தொகுப்பு

**எஸ். எம். மன்சூர்**

# كتاب الصلاة

تأليف : شريف الدين محمد منصور



1423 H

١٤٢٣ هـ

السعر
١.٧٦ ريال

تاميلي

المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالبديعة

# தொழுகை

ஆரம்ப நிலையிலுள்ள முஸ்லிம்களுக்கான
தொழுகை வழிகாட்டல் நூல்

தொகுப்பு
எஸ். எம். மன்சூர்

வெளியீடு
அழைப்பு, வழிகாட்டல்களுக்கான கூட்டுறவுச் செயலகம்
அல் பதிய்யா - சனசமூகப் பிரிவு
ரியாத், சவூதி அரேபியா.

*''(உள்ளச்சத்துடன்) பணிந்தவர்களாக அல்லாஹ்விற்காக (தொழுகையில்) நில்லுங்கள்.''*

● அல் குர்ஆன் 2:238

# தொழுகை

## ஆரம்ப நிலையிலுள்ள முஸ்லிம்களுக்கான தொழுகை வழிகாட்டல் நூல்

தொகுப்பு
எஸ். எம். மன்சூர்

வெளியீடு
அழைப்பு, வழிகாட்டல்களுக்கான கூட்டுறவுச் செயலகம்
அல் பதிய்யா - சனசமூகப் பிரிவு
ரியாத், சவூதி அரேபியா.

*''என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ அவ்வாறே நீங்களும் தொழுங்கள்.''*

● நூல்கள்: புகாரி, அஹ்மத்

# முன்னுரை

இஸ்லாமியக் கடமைகளுள் மிகப் பிரதானமானது, தொழுகை. தன்னை 'முஸ்லிம்' எனக் கூறிக் கொள்ளும் ஒவ்வொருவரும் எந்த நிலையிலும் விட்டு விடாமல் செய்து வர வேண்டிய இபாதத் - தொழுகை.

இந்நூல், புதிதாக இஸ்லாத்தைத் தழுவிய ஆரம்ப நிலையிலுள்ள முஸ்லிம்களுக்கென தொகுக்கப்பட்டது. தொழுகையைப் பொறுத்த மட்டில் ஏராளமான சுன்னத்தான அமல்கள் உண்டு. இதில் தொழுகையின் முக்கியமான - தொழுகை நிறைவேறுவதற்கு அவசியமான - அம்சங்கள் மட்டுமே எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இதன் கருத்து அந்த சுன்னத்தான அமல்கள் புறக்கணிக்கப் படுகின்றன என்பது அல்ல.

இஸ்லாத்தைத் தழுவிய ஒருவர் உடனடியாகத் தொழுகைக்கு விரையும் போது அது பாரமாக இருக்கக் கூடாது என்பதற்காக இது இப்படி அடிப்படை அம்சங்களை மட்டும் வைத்துத் தயாரிக்கப்பட்டது, இவற்றில் முழுப் பயிற்சி பெற்று தொழுகையைக் கடைப்பிடிப்பவர்கள் தொழுகையின் ஏனைய சுன்னத்தான அமல்களையும் அறிந்து கடைப்பிடிக்க முன்வர வேண்டும். அதற்குத் துணைப் புரியும் ஏராளமான நூல்கள் தமிழில் உண்டு.

மேலும், பர்லான தொழுகைகளும் அவற்றிற்கு முன்/பின் உள்ள சுன்னத்தான தொழுகைகளுமே இதில் இடம் பெற்றுள்ளன. இன்னும் பல வகையான தொழுகைகள் உண்டு. அவற்றைக் காலக் கிரமத்தில் தெரிந்து நடைமுறைக்குக் கொண்டுவருவது வாசகர்களின் இறையுணர்வையும், அச்சத்தையும் பொறுத்து அமைகின்றது.

அல்லாஹ் எம் யாவரையும் அவன் பொருந்திக் கொண்ட நல்லவர்களுள் ஆக்கி அருள்வானாக.

**-வெளியீட்டாளர்கள்.**

**1993-05-11**

# இஸ்லாம்

இஸ்லாம் இறைவனின் மார்க்கம்; முழு மனித சமுதாயத்தினதும் ஈருலக ஈடேற்றத்திற்கென இறைவனால் தரப்பட்ட மார்க்கம்.

கிறிஸ்தவம் இயேசு கிறிஸ்துவின் பெயராலும், பௌத்தம் மகான் புத்தரின் பெயராலும், மார்க்ஸியம் கால்மார்க்ஸின் பெயராலும் அழைக்கப்படுகின்றன. ஹிந்து மதம் ஹிந்து சமூகத்தினது பெயராலும், யூத மதம் யூத சமூகத்தின் பெயராலும் நிலைப் பெற்றுள்ளன.

இஸ்லாம் தனிப்பட்ட ஒருவரது பெயருடனோ ஒரு சமூகத்துடனோ தொடர்புடையதல்ல. அது முழு மனித சமுதாயத்திற்கும் கிடைத்த இறைவனின் பேரருள்.

இஸ்லாம் என்ற பெயரே அதற்குச் சான்று.

இஸ்லாம் என்றால் இறைவனுக்குக் கட்டுப்படல், கீழ்ப்படல், இணங்கி நடத்தல் என்பது பொருள். சாந்தி, சமாதானம் எனவும் பொருளுண்டு. அதாவது, எவர் இறைவனுக்குக் கீழ்ப்படிந்து அவன் கட்டளைகளை ஏற்று நடக்கின்றாரோ, அவர் மத்தியில் சாந்தி சமாதானம் வரும் என்பது அர்த்தமாகும்.

இஸ்லாத்தில் பல தெய்வ வணக்கம், சிலைகள், படங்கள், மரங்கள், நெருப்பு, ஆவிகள், மனிதர்கள் மீதான வணக்கம் என்பன இல்லை. இஸ்லாம் மனிதனின் இயற்கையான தேவைகளை மறுக்கவில்லை; ஒழுங்கு படுத்துகின்றது. பெண்களை கண்ணியமாக நோக்குகின்றது. மொழி, சாதி, இன, நிற, வர்க்க,தேச ரீதியாக மனிதர்களை வேறுபடுத்துவதை முற்றாக நிராகரிக்கின்றது.

ஒன்றே குலம் - அது முழு மனித சமுதாயம்

ஒருவனே தேவன் - அவன் அல்லாஹ்

என்ற கொள்கையை எள்ளளவும் பிழையின்றி பின்பற்றும் ஒரே மார்க்கம் இஸ்லாம் மட்டுமே. ஆராய்ந்து பார்க்கலாம்.

---

إِنَّ الدِّينَ عِندَ اللَّهِ الْإِسْلَامُ

(அல் குர்ஆன் 3:19)

**"திண்ணமாக இஸ்லாம் மட்டுமே அல்லாஹ்விடம் (ஒப்புக் கொள்ளப்பட்ட) வாழ்க்கை நெறி (தீன்) ஆகும்"**

என்பது இறை வாக்கு.

# நம்பிக்கைக்குரிய ஆறு அம்சங்கள்

எவர் கீழ்க்காணும் ஆறு அம்சங்களில் உறுதியான நம்பிக்கை கொள்கிறாரோ அவர் முஸ்லிம் ஆவார்.

| | |
|---|---|
| آمَنْتُ بِاللّٰهِ | 1. ஆமன்து (B)பில்லாஹி |
| وَمَلَائِكَتِهِ | 2. வ மலாஇக்கதிஹீ |
| وَكُتُبِهِ | 3. வ குத்து(B)பிஹீ |
| وَرُسُلِهِ | 4. வ ருஸுலிஹீ |
| وَالْيَوْمِ الْآخِرِ | 5. வல் யவ்மில் ஆஹிரி |
| وَالْقَدْرِ خَيْرِهِ وَشَرِّهِ مِنَ اللّٰهِ تَعَالَى | 6. வல் கத்ரி ஹைரிஹி வஷர்ரிஹி மினல்லாஹி தஆலா |

**இவை தமிழில்:**

1. அல்லாஹ் ஒருவனையும் (அவனுடைய)
2. மலாஇகாமார்களையும் (அவனுடைய)
3. வேதங்களையும் (அவனுடைய)
4. தூதர்களையும்
5. (தீர்ப்பு வழங்கும்) மறுமை நாளையும்
6. நன்மை தீமை அனைத்தும் அல்லாஹ்வின் புறத்திலிருந்தே உள்ளன எனும் 'கலா கத்ரை'யும் நம்புவதை குறிக்கும். இதை அரபியில் 'ஈமான்' எனக் கூறப்படும்.

---

அல்லாஹ் தன் தூதரை விளித்து கூறுகின்றான்:

قُلْ يٰعِبَادِ الَّذِيْنَ اٰمَنُوا اتَّقُوْا رَبَّكُمْ

''(நபியே!)கூறுவீராக: நம்பிக்கை கொண்டிருக்கின்ற என் அடியார்களே! உங்களுடைய இறைவனுக்கு அஞ்சுங்கள்.''

(அல் குர்ஆன் 39:10)

## கட்டாயக் கடமைகள் ஐந்து.

عَنِ ابْنِ عُمَرَ رَضِيَ اللّٰهُ عَنْهُمَا قَالَ قَالَ رَسُولُ اللّٰهِ ﷺ بُنِيَ الإِسْلَامُ عَلَىٰ خَمْسٍ شَهَادَةِ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَأَنَّ مُحَمَّداً عَبْدُهُ وَرَسُولُهُ وَإِقَامِ الصَّلَاةِ وَإِيْتَاءِ الزَّكَاةِ وَالْحَجِّ وَصَوْمِ رَمَضَانَ - مُتَّفَقٌ عَلَيْهِ.

ரஸூல் (ஸல்) அவர்கள் மொழிந்ததாக இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

**இஸ்லாம் எனும் கட்டிடம் ஐந்து தூண்களின் மீது எழுப்பப்பட்டுள்ளது.**

**(அவையாவன:)**

1. ''அல்லாஹ்வைத் தவிர (வணங்குவதற்கு, வழிபடுவதற்கு, சட்டம் இயற்றுவதற்கு, கீழ்ப்படிவதற்கு ) வேறு இறைவன் இல்லை'' என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனுடைய அடிமையும் திருத்தூதரும் ஆவார்'' என சான்று பகர்தல்
2. தொழுகையை நிலை நிறுத்துதல்
3. ஸக்காத் கொடுத்து வரல்
4. ஹஜ்ஜை நிறைவேற்றல்
5. ரமழான் மாதத்தில் நோன்பு நோற்றல்

-ஆதாரம்: புகாரி, முஸ்லிம்

இவை ஒரு முஸ்லிமால் எந்தக் கட்டத்திலும் தவிர்க்க முடியாத கட்டாயக் கடமைகள். இவற்றிற்குரிய கட்டமும் வாய்ப்பு வசதிகளும் வந்தால் கட்டாயம் நிறைவேற்றியேயாக வேண்டும்.

இஸ்லாத்தினுள் நுழைவதற்கான தலைவாயில் அல்லாஹ்வின் இறைமையை, தனித்துவத்தை, அவனுக்குப் பங்காளிகள் இல்லை என்பதை, அவன் ஒருவன் மட்டுமே வணங்கி வழிபடத் தகுந்தவன் என்பதை உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்வதாகும். இந்த நம்பிக்கையில் சிறு கலங்கம் ஏற்பட்டாலும் வாழ்வைப் பாதிக்கவே செய்யும். இதன் இரண்டாவது பகுதி ரஸூல் (ஸல்) அவர்களது நபித்துவத்தை ஏற்பதாகும். இந்த இரண்டையும் ஒரே சொற்றொடர் தருகின்றது.

இந்தச் சொற்றொடரை - 'இஸ்லாத்தை வாழ்வில் கடைப்பிடிப்பேன்' என்ற உறுதியோடு, உள்ளத்தால் ஏற்று, நாவால் மொழிவது அவசியம்.

اَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

**அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அ(B)ப்துஹு வ ரஸூலுஹு**

இந்தச் சொற்றொடரை - கலிமாவை - மொழிந்த முஸ்லிமான ஒருவர், ஆணாயினும் பெண்ணாயினும், தினமும் ஐந்து நேரம் தொழுவது கட்டாயம்.

## தொழுகையைப் பற்றி ...

''இந்தத் தொழுகையைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

اُتْلُ مَآ اُوْحِيَ اِلَيْكَ مِنَ الْكِتٰبِ وَاَقِمِ الصَّلٰوةَ ۗ اِنَّ الصَّلٰوةَ تَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ ۗ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ ۗ وَاللّٰهُ يَعْلَمُ مَا تَصْنَعُوْنَ

**''நபியே!) இவ்வேதத்திலிருந்து உமக்கு அறிவிக்கப்பட்டதை நீர் எடுத்தோதுவீராக; இன்னும் தொழுகையை நிலை நிறுத்துவீராக; நிச்சயமாக தொழுகை (மனிதரை) மானக்கேடானவற்றையும் தீமையையும் விட்டு விலக்கும். நிச்சயமாக, அல்லாஹ்வின் திக்ரு (தியானம்) மிகவும் பெரிதா(ன சக்தியா)கும்; அன்றியும் அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிகிறான்.''**

(அல் குர்ஆன் 29:45)

| தொழுகைகளும் அவற்றின் நேரங்களும் | | முந்திய ஸுன்னத் | பர்லானவை | பிந்திய ஸுன்னத் |
|---|---|---|---|---|
| 1. ஃபஜ்ர் | அதிகாலை | 02 | 02 | - |
| 2. ளுஹர் | பகல் | 02அல்லது 04 | 04 | 02 |
| 3. அஸர் | பின்னேரம் | - | 04 | - |
| 4. மஃரிப் | மாலை | - | 03 | 02 |
| 5. இஷா | இரவு | - | 04 | 02+வித்ர் |

# ‘வுளூஉ’ செய்தல்


தொழுகைக்குத் தயாராகும் ஒருவர் ‘வுளூஉ’ என்னும் சுத்தம் செய்வது கட்டாயக் கடமையாகும்.


## அதன் வழிமுறை:

1. ‘வுளூஉ’ செய்கிறேன்’ என்று மனதில் நினைத்தல் - நிய்யத் செய்தல்
2. بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ‘(B)பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்’

   என்று மொழிந்து ‘வுளூஉ’ செய்ய ஆரம்பித்தல்

3. இரண்டு கைகளையும் மணிக்கட்டு வரை மூன்று முறை கழுவுதல்
4. வாயை கொப்பளித்து மூக்குக்குத் தண்ணீர் செலுத்தி மூன்று முறை கழுவுதல்
5. மேல் நெற்றியிலிருந்து கீழ் நாடி வரையிலும், ஒரு காதில் இருந்து மறு காது வரையும் முகத்தை மூன்று முறை கழுவுதல்.
6. இரண்டு கைகளையும் முழங்கையுட்பட மூன்று முறை கழுவுதல்.
7. தலையை தண்ணீரால் (மஸ்ஹு) தடவுதல் ஒரு முறை மட்டுமே.





8. காதுகள் இரண்டையும் தண்ணீரைக் கொண்டு ஒருமுறை (மஸ்ஹு செய்தல்) தடவுதல்.

9. இரண்டு கால்களையும் கரண்டைக் கால் உட்பட மூன்று முறை கழுவுதல்.

**குறிப்பு:** குறிப்பிட்ட உறுப்புக்களை தோல் மடிப்புகள் உட்பட நன்றாகத் தேய்த்து கழுவுதல் அவசியம்.

# தயம்மும் செய்தல்

* தண்ணீர் இல்லாமை
* கடுங்குளிர்
* நோய்வாய்ப்பட்டு தண்ணீரைத் தொட முடியாதிருத்தல்
* தண்ணீர் இருந்தும் குளித்தல், வுளூஉ செய்தல் போன்றவை தவிர்ந்த மற்ற அத்தியாவசியமான தேவைகளுக்கே போதுமானது என்ற நிலைமை இருத்தல்

மேற்கூறிய நிலைகளில் தயம்மும் செய்வது ஆகுமானது.

## தயம்மும் செய்யும் முறை

தயம்மும் செய்யப் போவதை மனதால் எண்ணி, 'பிஸ்மில்லாஹ்' கூற வேண்டும். பின்னர் இரண்டு கைகளையும் சுத்தமான மண்ணில் ஒரு முறை மட்டும் அடித்து, முதலில் முகத்தையும், பின்னர் மணிக்கட்டுக்குக் கீழ் இரு கைகளின் வெளிப்புறத்தையும் தடவிக் கொள்ள வேண்டும்.

'வுளூஉ'வை முறிக்கும் எல்லாச் செயல்களும் தயம்முமை முறித்து விடும். இன்னும் தண்ணீரைப் பெறாதவர் தண்ணீரைப் பெற்றுக் கொண்டால்; தண்ணீரை உபயோகிக்க இயலாது நோய்வாய்ப்பட்டவரின் நோய் நீங்கி விட்டால்; தண்ணீரை உபயோகிக்க இருந்தத் தடை நீங்கிவிட்டால் - இக் கட்டங்களிலும் தயம்மும் முறிந்து விடும்.

'வுளூஉ' செய்து முடிந்த பின்னர் கீழ்க்காணும் துஆவை - பிரார்த்தனையை - ஓதுவது சுவன வாழ்வுக்கு வழியமைப்பதாய் இருக்கும்.

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّداً

عَبْدُهُ وَرَسُولُهُ. اللّٰهُمَّ اجْعَلْنِي مِنَ التَّوَّابِينَ وَاجْعَلْنِي مِنَ الْمُتَطَهِّرِينَ ۝

**அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீக்கலஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அ(B)ப்துஹு வ ரஸூலுஹு அல்லா ஹும்மஜ்அல்னீ, மினத்தவ்வா(B)பீன வஜ்அல்னி மினல் முததஹ்ஹிரீன்.**

**கருத்து:** வணங்கப்படுபவன் அல்லாஹ்வன்றி வேறெவருமில்லை. அவன் தனித்தவன்; அவனுக்கு இணையில்லை என நான் உறுதியாக சான்று பகர்கின்றேன். மேலும், நிச்சயமாக முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனுடைய அடியாராகவும், அவனின் திருத்தூதராகவும் இருக்கிறார்கள் எனவும் சான்று பகர்கின்றேன்.

யா அல்லாஹ்! என்னை பாவமீட்சி பெற்றவர்களில் ஆக்கி வைப்பாயாக! இன்னும், சுத்தமாக்கிக் கொண்டவர்களிலும் என்னை ஆக்கி வைப்பாயாக!

-ஆதாரம்: முஸ்லிம், திர்மிதீ

## 'வுளூஉ' வை முறிக்கும் செயல்கள்

* மலம் ஜலம் கழித்தல்
* பின்துவாரத்திலிருந்து காற்று பிரிதல்
* தனக்கு என்ன ஏற்பட்டது என்று அறிய முடியாத கடுந்தூக்கத்தில் இருத்தல்
* ஒட்டக இறைச்சி உண்ணல்

## கட்டாயக் குளிப்பு கடமையாதல்

* ஆணும் பெண்ணும் உடலுறவு கொள்ளுதல்
* விந்து வெளியாதல்
* பெண்களுக்கு மாதவிடாய் (ஹைளு) ஏற்படுதல்
* பெண்களுக்கு மகப்பேறு (நிபாஸ்)க்குப் பின் இரத்தம் வெளியாதல்
* ஒருவர் இஸ்லாத்தைத் தழுவ எண்ணி, அதில் உறுதி கொள்ளல்
* முஸ்லிம் ஒருவர் மரணித்து விடுதல்

இத்தகைய கட்டங்களில் 'அசுத்தம் நீக்கக் குளிப்பதாக' நிய்யத் செய்து (மனதால் எண்ணிக்) கொண்டு, உடல் முழுவதும் நனையும்படி குளிக்க வேண்டும்/குளிப்பாட்ட வேண்டும். குளிப்பதற்கு முன் கைகளைக் கழுவுதல், மர்மஸ்தானத்தைத் தேய்த்து கழுவுதல், தொழுகைக்குப் போல வுளூஉ செய்து கொள்ளுதல் அவசியம்.

**குறிப்பு:** ஒருவர் 'வுளூஉ' செய்த பின்னர் காலுறை (SOCKS) கள் அணிந்து கொண்டால், சாதாரண நாட்களில் 24 மணி நேரமும், பிரயாண நாட்களில் 03 நாட்களும் அவற்றைக் கழற்றாமல் அவற்றிற்கு மேல் (மஸ்ஹு செய்தல்) தண்ணீரைக் கொண்டு தடவுதல் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய 'வுளூஉ' செய்வதற்குரிய பாகங்களை முறைப்படி வுளூஉ செய்தேயாக வேண்டும்.

# தொழுகைக்குத் தயாராகுங்கள்!

''மறுமை நாளின்போது அடியானின் செயல்களில் முதலாவதாக கணக்குக் கேட்கப்படுவது அவனது தொழுகை பற்றியே. அது சீர்பட்டுவிட்டால் நிச்சயமாக அவர் வெற்றிபெற்று கரை சேர்ந்து விட்டார். அது சீர்கெட்டுவிட்டால், அவர் நஷ்டமும் கைசேதமும் உடையவராக ஆகி விடுகின்றார்.''

மொழிந்தவர்: ரஸூல் (ஸல்) அவர்கள்
அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி) அவர்கள்
ஆதாரம்: திர்மிதீ, இப்னுமாஜா.

## பாங்கு (அதான்) அழைப்பு

இது தொழுகைக்காக அந்தந்த நேரத்தில் பள்ளியிலிருந்து விடுக்கப்படும் அழைப்பாகும்.

அதன் விபரம் வருமாறு:

اَللّٰهُ أَكْبَرُ ط

**அல்லாஹு அக்(B)பர்**

(04 முறை)

'அல்லாஹ் மிகப் பெரியவன்.'

أَشْهَدُ أَنْ لَّا إِلَـٰهَ إِلَّا اللّٰهُ ط

**அஷ்ஹது அன்லாஇலாஹ இல்லல்லாஹ்**

(02 முறை)

'அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை' என நான் சான்று பகர்கின்றேன்.

أَشْهَدُ أَنَّ مُحَمَّداً رَّسُولُ اللَّهِ ط

**அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்**

(02 முறை)

'நிச்சயமாக, முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர்' என நான் சான்று பகர்கின்றேன்.

حَيَّ عَلَى الصَّلٰوةِ ط **ஹய்யஅலஸ் ஸலா(த்)**

(02 முறை)

'தொழுகையின்பால் வாருங்கள்'.

حَيَّ عَلَى الْفَلَاحِ ط **ஹய்ய அலல் ஃபலாஹ்**

(02 முறை)

'வெற்றியின்பால் வாருங்கள்.'

اَللّٰهُ أَكْبَرُ ط **அல்லாஹு அக்(B) பர்**

(02 முறை)

'அல்லாஹ் மிகப் பெரியவன்.'

لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ ط **லா இலாஹ இல்லல்லாஹ்**

(01 முறை)

'அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் - இறைவன் இல்லை.'

ஃபஜ்ருடைய பாங்கில் மட்டும் 'ஹைய்ய அலல் ஃபலாஹ்' என மொழிந்த பின்னர் கீழ்க்காண்பதை மொழிய வேண்டும்.

اَلصَّلٰوةُ خَيْرٌ مِنَ النَّوْمِ ط **அஸ்ஸலாத்து ஹைரும் மினன் நவ்ம்**

தூக்கத்தைவிட தொழுகை மேலானது.'

இந்த பாங்கை கூறக் கேட்பவர்கள் அதே வார்த்தைகளை கூடுதல் குறைத்தலின்றிக் கூற வேண்டும். எனினும், இடையில் வரும் ' ஹய்ய அலஸ் ஸலா(த்), ஹய்ய அலல் ஃபலாஹ்' என்ற வார்த்தைகளைக் கேட்கும்பொழுது

لَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللّٰهِ ط

**''லா ஹவ்ல வலாகுவ்வத்த இல்லா (B)பில்லாஹ்''**

என்று கூறவேண்டும்.

பாங்கு முடிந்ததும் ரஸூல் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வதுடன் துஆவும் ஓத வேண்டும்.

அவை வருமாறு:

ஸலவாத்

اللّٰهُمَّ صَلِّ عَلَىٰ مُحَمَّدٍ وَعَلَىٰ آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَىٰ إِبْرَاهِيْمَ وَعَلَىٰ آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ ○ اَللّٰهُمَّ بَارِكْ عَلَىٰ مُحَمَّدٍ وَعَلَىٰ آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلَىٰ إِبْرَاهِيْمَ وَعَلَىٰ آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ ○

**அல்லாஹும்ம ஸல்லிஅலா முஹம்மதின் வஆலாஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இ(B)ப்ராஹீம வஆலா ஆலி இ(B)ப்ராஹீம இன்னக்க ஹமீதும் மஜீத். அல்லாஹும்ம (B)பாரிக் அலா முஹம்மதின் வஆலா ஆலி முஹம்மதின் கமா (B)பாரக்த அலா இ(B)ப்ராஹீம வஆலா ஆலி இ(B) ப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத்.**

கருத்து: யா அல்லாஹ்! முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர் மீதும், இப்ராஹிம் (அலை) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர் மீதும் அருள் செய்தது போல் அருள் செய்வாயாக! நிச்சயமாக நீ புகழப்பட்டவனும் கண்ணியத்திற்குரியவனுமாய் இருக்கின்றாய்.

யா அல்லாஹ்! முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர் மீதும், இப்ராஹிம் (அலை) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர் மீதும், (பரக்கத்து) பாக்கியம் செய்தது போல் பாக்கியத்தை நல்குவாயாக! நிச்சயமாக நீ புகழப்பட்டவனும் கண்ணியத்திற்குரியவனுமாய் இருக்கின்றாய்.

துஆ

اللّٰهُمَّ رَبَّ هٰذِهِ الدَّعْوَةِ التَّآمَّةِ وَالصَّلٰوةِ الْقَآئِمَةِ آتِ مُحَمَّدَنِ الْوَسِيْلَةَ وَالْفَضِيْلَةَ وَابْعَثْهُ مَقَاماً مَحْمُوْدَنِ الَّذِي وَعَدْتَهُ ○

**அல்லாஹும்ம ர(B)ப்(B)ப ஹாதிஹித் தஃவ(த்)தித் தாம்மத்தி, வஸ்ஸலாத்தில் காஇமத்தி, ஆ(த்)தி முஹம்மதனில் வஸீலத்த வல் ஃபளீலத்த வ(B) ப் அத்ஹு மகாமன்ம் மஹ்மூதனில்லதீ வஅத்தஹூ.**

கருத்து: நிறைவான இவ்வழைப்பு, நிலைபெற்றுவிட்ட தொழுகை, ஆகியவற்றின் இரட்சகா! முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வஸீலாவை (சுவனத்தில் ஓர் உயர்தரமான பதவியை)யும், சிறப்பையும் நல்குவாயாக! நீ வாக்களித்துள்ளாயே அத்தகைய புகழப்பட்ட தகுதிக்கு அவர்களை அனுப்பி வைப்பாயாக!

اَللهُ أَكْبَرُ اَللهُ أَكْبَرُ
أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ ○
أَشْهَدُ أَنَّ مُحَمَّدًا رَّسُولُ اللهِ ○
حَيَّ عَلَى الصَّلٰوةِ ○ حَيَّ عَلَى الْفَلَاحِ ○
قَدْ قَامَتِ الصَّلٰوةُ ○ قَدْ قَامَتِ الصَّلٰوةُ ○ط
اَللهُ أَكْبَرُ اَللهُ أَكْبَرُ ○ لَا إِلٰهَ إِلَّا اللهُ ○ط

**ஜமாஅத் - கூட்டுத் தொழுகை ஆரம்பமாவதற்கு முன் முஅத்தின் விடுக்கும் 'இகாமத்' அழைப்பு.**

## தொழுகை முறை பற்றிய விளக்கம்

ஒருவர் 'வுளூஉ' செய்து தொழுகைக்குத் தயாராகி விட்டால் எந்தத் தொழுகையை தொழப் போகிறோமோ அதை மனதில் நினைத்து - நிய்யத் செய்து - கிப்லாவை முன்னோக்க வேண்டும். நிய்யத்தை நாவால் மொழிய வேண்டும் என்பது நபிவழியல்ல.

'A'



பின்னர், இங்கு படம் 'A' யில் உள்ளபடி இரு கைகளையும் காது வரை உயர்த்தி, 'அல்லாஹு அக்(B)பர்' என்ற தக்பீரைக் கூறிக் கொண்டு இடது கையை நெஞ்சின்மேல் வைத்து அதற்கு மேல் வலது கையை வைத்துக்கொள்ள வேண்டும்.

இப்பொழுது அங்கிங்கு பார்க்கக் கூடாது; சிரித்தல், கதைத்தல், ஆடுதல் செய்யக் கூடாது; தாம் ஸுஜூது செய்யும் போது எந்த இடத்தில் நெற்றி படுமோ, அந்த இடத்தைப் பார்த்தவராக கீழ்வரும் சிறிய பிரார்த்தனையை ஓத வேண்டும்.

سُبْحَانَكَ اَللّٰهُمَّ وَبِحَمْدِكَ وَتَبَارَكَ اسْمُكَ وَتَعَالٰى جَدُّكَ وَلَا إِلٰهَ غَيْرُكَ ○ط

**ஸுப்ஹானகல்லாஹும்ம வ பிஹம்திக்க வ த(B)பாரகஸ்முக்க வ தஆலா ஜத்துக்க வ லாஇலாஹ கய்ருக்க.**

கருத்து: உயர்வடைந்துவிட்ட உனது மகத்துவம், இன்னும் பாக்கியமிக்க (பரக்கத்துடைய) 'உனது பெயரை', மேலும் மகத்தான உனது புகழ் (ஆகியவைகளைக்) கொண்டு (சகல குறைகளில் இருந்தும்) உன்னை நான் பரிசுத்தமாக்குகிறேன்; (துதிக்கிறேன்). மேலும், நீயன்றி (வணக்கத்திற்குரியவன் வேறு) இறைவன் இல்லை.

இதனைத் தொடர்ந்து ஸூரா ஃபாத்திஹாவை ஓத வேண்டும். தொழுகையில் ஸூரா ஃபாத்திஹா ஓதுவது மிகக் கட்டாயம் என்பதை உணர்க.

أَعُوذُ بِاللهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ ○ط

**அஊது(B) பில்லாஹி மினஸ் ஸைதானிர்ரஜீம்.**

'விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.'

| | |
|---|---|
| (B)பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம். | بسم الله الرحمن الرحيم ○ |
| அல்ஹம்து லில்லாஹி ர(B)ப்(B)பில் ஆலமீன். | اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ |
| அர்ரஹ்மா னிர்ரஹீம். | اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ |
| மாலிக்கி யவ்மித்தீன். | مٰلِكِ يَوْمِ الدِّيْنِ |
| இய்யாக்க நஃ(B)புது வஇய்யாக்க நஸ்தஈன். | اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ |
| இஹ்தினஸ் ஸிராதல் முஸ்தகீம். | اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ |
| ஸிராதல்லதீன அன்அம்த்த அலைஹிம். | صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ |
| கய்ரில் மஃலூபி அலைஹிம். (ஆமீன்) வலல்லால்லீன் | غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ. آمين. |

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப் பெயரால் (துவங்குகின்றேன்).

அனைத்துப் புகழும், அகிலங்கள் எல்லாவற்றையும் படைத்து வளர்த்துப் பரிபக்குவப்படுத்தும் (நாயனான) அல்லாஹ்வுக்கே ஆகும்.

(அவன்) அளவற்ற அருளாளன்; நிகரற்ற அன்புடையோன்.

(அவனே நியாயத்) தீர்ப்பு நாளின் அதிபதி(யும் ஆவான்).

(இறைவா!) உன்னையே நாங்கள் வணங்குகிறோம்; உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகிறோம்.

நீ எங்களை நேர்வழியில் நடத்துவாயாக!

(அது) நீ எவர்களுக்கு அருள் புரிந்தாயோ அவ்வழி.

(அது) உன் கோபத்துக்கு ஆளானோர் வழியுமல்ல; நெறி தவறியோர் வழியுமல்ல.

ஸூரா பாத்திஹாவை திருத்தமாக ஓதிய பின், கீழ்க்காணும் சிறிய ஸூராக்களுள் ஒன்றையோ குர்ஆனின் வேறு ஸூராக்களுள் ஒன்றையோ ஓதலாம்.

## அத்தியாயம் 103

***ஸூரத்துல் அஸ்ரி - காலம்***
***ருகூஃ: 1 மக்கீ வசனங்கள் : 3***

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

وَالْعَصْرِ ۝١ اِنَّ الْاِنْسَانَ لَفِيْ خُسْرٍ ۝٢ اِلَّا الَّذِيْنَ اٰمَنُوْا
وَعَمِلُوا الصّٰلِحٰتِ وَتَوَاصَوْا بِالْحَقِّ وَتَوَاصَوْا بِالصَّبْرِ ۝٣

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப் பெயரால் (துவங்குகின்றேன்).

காலத்தின் மீது சத்தியமாக.

நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கின்றான்.

ஆயினும், எவர்கள் ஈமான் கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்து, சத்தியத்தைக் கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்து, மேலும் பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசிக்கிறார்களோ அவர்களைத் தவிர (அவர்கள் நஷ்டத்திலில்லை).

## அத்தியாயம் 112

***ஸூரத்துல் இஃக்லாஸ் - ஏகத்துவம்***
***ருகூஉ: 1 மக்கீ வசனங்கள்: 4***

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

قُلْ هُوَ اللَّهُ أَحَدٌ ۝١ اللَّهُ الصَّمَدُ ۝٢ لَمْ يَلِدْ
وَلَمْ يُولَدْ ۝٣ وَلَمْ يَكُن لَّهُۥ كُفُوًا أَحَدٌۢ ۝٤

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப் பெயரால் (துவங்குகின்றேன்).

(நபியே!) நீர் கூறுவீராக: அல்லாஹ் அவன் ஒருவனே.

அல்லாஹ் (எவரிடத்தும்) தேவையற்றவன்.

அவன் (எவரையும்) பெறவுமில்லை: (எவராலும்) பெறப்படவுமில்லை.

அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை.

## அத்தியாயம் 113

***ஸூரத்துல் ஃபலக் - அதிகாலை***
***ருகூஉ: 1 மக்கீ வசனங்கள் : 5***

بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

قُلْ أَعُوذُ بِرَبِّ الْفَلَقِ ۝١ مِن شَرِّ مَا خَلَقَ ۝٢ وَمِن
شَرِّ غَاسِقٍ إِذَا وَقَبَ ۝٣ وَمِن شَرِّ النَّفَّٰثَٰتِ فِي
الْعُقَدِ ۝٤ وَمِن شَرِّ حَاسِدٍ إِذَا حَسَدَ ۝٥

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப் பெயரால் (துவங்குகின்றேன்).

(நபியே!) நீர் சொல்வீராக: அதிகாலையின் இறைவனிடம் நான் காவல் தேடுகிறேன்.

அவன் படைத்தவற்றின் தீங்கை விட்டும்-

இருள் பரவும் போது ஏற்படும் இரவின் தீங்கை விட்டும்-

இன்னும், முடிச்சுகளில் (மந்திரித்து) ஊதும் பெண்களின் தீங்கை விட்டும்,

பொறாமைக்காரன் பொறாமை கொள்ளும் போதுண்டாகும் தீங்கை விட்டும் (காவல் தேடுகிறேன்).

## அத்தியாயம் 114

***ஸூரத்துந் நாஸ் - மனிதர்கள்***
***ருகூஃ: 1 மக்கீ வசனங்கள் : 6***

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ

قُلْ أَعُوذُ بِرَبِّ ٱلنَّاسِ ١ مَلِكِ ٱلنَّاسِ ٢ إِلَٰهِ
ٱلنَّاسِ ٣ مِن شَرِّ ٱلْوَسْوَاسِ ٱلْخَنَّاسِ ٤ ٱلَّذِى
يُوَسْوِسُ فِى صُدُورِ ٱلنَّاسِ ٥
مِنَ ٱلْجِنَّةِ وَٱلنَّاسِ ٦

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் (துவங்குகின்றேன்).

(நபியே!) நீர் கூறுவீராக: மனிதர்களின் இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன்.

(அவனே) மனிதர்களின் அரசன்;

(அவனே) மனிதர்களின் நாயன்.

பதுங்கியிருந்து வீண் சந்தேகங்களை உண்டாக்குபவனின் தீங்கை விட்டும் (இறைவனிடத்தில் நான் காவல் தேடுகிறேன்).

அவன் மனிதர்களின் இதயங்களில் வீண் சந்தேகங்களை உண்டாக்குகிறான்.

(இத்தகையோர்) ஜின்களிலும், மனிதர்களிலும் இருக்கின்றனர்.

## அத்தியாயம் - 103.

வல் அஷ்ர். இன்னல் இன்ஸான லஃபீ ஹுஷ்ர். இல்லல்லதீன ஆமனூ வ அமிலுஸ் ஸாலிஹாத்தி வதவாஸவ் பில் ஹக்கி வதவா ஸவ் பிஸ்ஸப்ர்.

## அத்தியாயம் - 112.

குல்ஹுவல்லாஹு அஹத். அல்லாஹுஸ் ஸமத். லம்யலித். வலம் யூலத். வலம் யகுன்லஹு குஃபுவன் அஹத்.

## அத்தியாயம் - 113.

**குல்அஊது பிர(B)ப்(B)பில் ஃபலக். மின் ஸர்ரி மா ஹலக். வமின் சர்ரி காஸிகின் இதா வக(B)ப். வமின் சர்ரின் னஃப்ஃபாதாத்தி ஃபில் உகத். வமின் சர்ரி ஹாஸிதின் இதா ஹஸத்.**


## அத்தியாயம் - 114

**குல் அஊது Bபிரப்Bபின்னாஸ். மலிகின்னாஸ். இலாஹின்னாஸ். மின் ஸர்ரில் வஸ்வாஸில் ஹன்னாஸ். அல்லதீ யுவஸ்விஸு ஃபீ ஸுதூரின்னாஸ். மினல் ஜின்னத்தி வன்னாஸ்.**

அடுத்து 'B' படத்தில் போன்று 'ருகூஉ'விற்குச் செல்ல வேண்டும். அப்படிச் செல்லும் போது

**'அல்லாஹு அக்(B)பர்'**

எனக் கூறுவது அவசியம்.



'B'

ருகூவில் :

سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْمِ

**ஸுப்ஹான ர(B)ப்(B)**

**பியல் அலீம்**

என்பதை 03 முறை கூற வேண்டும்.

கருத்து: 'மாட்சிமை பொருந்திய எனது இரட்சகன் மிகத் தூய்மையானவன்.'

அடுத்ததாக,

سَمِعَ اللّٰهُ لِمَنْ حَمِدَه

**'ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதாஹ்'**

என மொழிந்து கொண்டு 'C' படத்தில் உள்ளது போல் நிலைக்கு வர வேண்டும்.



'C'

**கருத்து:** 'நிச்சயமாக, அல்லாஹ் தன்னைப் புகழ்வோனின் புகழ்ச்சியைக் கேட்பவனாக இருக்கின்றான்.'

நிலைக்கு வந்தவுடன்:

رَبَّنَا لَكَ الْحَمْد

**'ர(B)ப்(B)பனா லகல் ஹம்து'**

எனக் கூற வேண்டும்.

இதன் கருத்து: "எங்கள் இரட்சகா! புகழ் அனைத்தும் உனக்கே உரித்தாகுக." என்பதாகும்.

பின்னர் 'அல்லாஹு அக்பர்' என மொழிந்து கொண்டு படம் 'D' யில் போல் ஸுஜூது செய்ய வேண்டும். ஸுஜூதில் - பூமியில் நெற்றியை வைத்த நிலையில்,


'D'

سُبْحَانَ رَبِّيَ الأَعْلَى

**'ஸு(B)ப்ஹான ர(B)ப்(B)பியல் அஃலா'**

என 03 முறை கூற வேண்டும்.

இதன் கருத்து: "மிக உயர்வுமிக்க என் இரட்சகன், தூயவன்" என்பதாகும்.


'E'

பின்னர் படம் 'E' ல் போல் இருப்பில் இருந்து

رَبِّ اغْفِرْلِي

**'ர(B)ப்(B)பிஃபிர்லீ'**

என மொழிய வேண்டும்.

இதன் கருத்து: "என் இரட்சகா! என்னை நீ மன்னித்தருள்வாயாக." என்பதாகும்.


'F'

பின்னர் படம் 'F' ல் இருப்பது போல் மீண்டும் ஸுஜூதிற்குச் சென்று


'G'

سُبْحَانَ رَبِّيَ الأَعْلَى


**"சு(B)ப்ஹான ர(B)ப்(B)பியல் அஃலா"**

என (03) மூன்று முறை மொழிந்துவிட்டு படம் 'G' யில் போல் நிலைக்கு வந்து விட வேண்டும்.

இது வரையிலான செயல் முறை அடங்கியதற்கு 'ஒரு ரக்அத்' எனக் கூறப்படும். இப்படியானவை ஃபஜ்ரில் 02ம் , லுஹரில் 04ம், அஸரில் 04ம், மஃரிபில் 03ம், இஷாவில் 04ம் உள்ளன.

இறுதியாக, அத்தஹிய்யாத்து ஓத வேண்டும். நடு (சிறு) இருப்பில் ஓத வேண்டியதாவது வருமாறு:

اَلتَّحِيَّاتُ لِلّٰهِ وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ، اَلسَّلَامُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللّٰهِ
وَبَرَكَاتُهُ، اَلسَّلَامُ عَلَيْنَا وَعَلٰى عِبَادِ اللّٰهِ الصَّالِحِيْنَ ○ أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّداً عَبْدُهُ وَرَسُوْلُهُ.



படத்தில் உள்ளது போலிருந்து

**`அத்தஹிய்யாது லில் லாஹி வஸ் ஸலவாத்துத் தய்யி(B)பாத்து லில் லாஹி அஸ் ஸலாமு அலைக்க அய்யுஹன் ந(B)பிய்யு வரஹ்மதுல்லாஹி வ(B)பரகாத்துஹு அஸ்ஸலாமு அலைனா வஅலா இ(B)பாதில் லாஹிஸ் ஸாலிஹீன். அஷ்ஹது அன் லாஇலாஹ இல் லல் லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அ(B)ப்துஹு வரஸூலுஹு' என்று மொழியவும்.**

**கருத்து:**தூய வணக்கமும், காணிக்கைகளும், பிரார்த்தனைகளும் அல்லாஹ்வுக்கே உரியனவாகும். நபியவர்களே! உங்கள் மீது சாந்தி உண்டாகுமாக. அல்லாஹ்வின் அருளும், பரக்கத்தும் உங்கள் மீது உண்டாகுமாக. எங்கள் மீதும் அல்லாஹ்வின் நல்லடியார்கள் மீதும் சாந்தி உண்டாகுமாக, 'வணங்கப் படுபவன் அல்லாஹ்வைத் தவிர வேறெவரும் இல்லை' எனவும், நிச்சயமாக, 'முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது அடியாரும் திருத்தூதரும் ஆவார்கள் எனவும் சான்று பகர்கின்றேன்.

தொழுகையை ஸலாம் சொல்லி முடிக்க வருபவர்கள் அத்தஹிய்யாத்துடன் கீழ்க்காணும் ஸலவாத்தையும் பிரார்த்தனையையும் ஓதுவது அவசியம்.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى آلِ مُحَمَّدٍ
كَمَا صَلَّيْتَ عَلٰى إِبْرَاهِيْمَ وَعَلٰى آلِ إِبْرَاهِيْمَ
وَبَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى آلِ مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ
عَلٰى إِبْرَاهِيْمَ وَعَلٰى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ

ஸ
ல
வா
த்

**அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லய்த்த அலா இ(B)ப்ராஹீம வஅலா ஆலி இ(B)ப்ராஹீம வபாரிக் அலா முஹம்மதின் வஆலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த்த அலா இ(B)ப்ராஹீம வஅலா ஆலி இ(B)ப்ராஹீம இன்னக்க ஹமீதும் மஜீத்.**

கருத்து: ''யா அல்லாஹ்! இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர் மீதும் நீ அருள் புரிந்தது போலவே, முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர் மீதும் நீ அருள் புரிவாயாக.

யா அல்லாஹ்! இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர் மீதும் பரக்கத்துகளை நல்கியது போலவே, முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தினர் மீதும் பரக்கத்துச் செய்வாயாக. நிச்சயமாக, நீ புகழப் பட்டவனும் கண்ணியத்திற்குரியவனுமாய் இருக்கின்றாய்.''

اَللّٰهُمَّ اغْفِرْلِيْ مَا قَدَّمْتُ وَمَا
أَخَّرْتُ وَمَا أَسْرَرْتُ وَمَا أَعْلَنْتُ وَمَا أَسْرَفْتُ وَمَا
أَنْتَ أَعْلَمُ بِهِ مِنِّيْ أَنْتَ الْمُقَدِّمُ وَأَنْتَ الْمُؤَخِّرُ
لَا إِلٰهَ إِلَّا أَنْتَ سُبْحَانَكَ إِنِّيْ كُنْتُ مِنَ الظَّالِمِيْنَ
اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُبِكَ مِنْ عَذَابِ الْقَبْرِ وَمِنْ
عَذَابِ النَّارِ وَمِنْ فِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ وَمِنْ
فِتْنَةِ الْمَسِيْحِ الدَّجَّالِ

துஆ

(பிரார்த்தனை):

اَللّٰهُمَّ إِنِّيْ ظَلَمْتُ نَفْسِيْ ظُلْمًا كَثِيْرًا كَبِيْرًا
وَلَا يَغْفِرُ الذُّنُوْبَ إِلَّا أَنْتَ فَاغْفِرْ لِيْ
مَغْفِرَةً مِّنْ عِنْدِكَ وَارْحَمْنِيْ إِنَّكَ
أَنْتَ الْغَفُوْرُ الرَّحِيْمُ

அல்லாஹும்ம மஃபிர்லீ மாகத்தம்த்து வ மா அஹ்ஹர்த்து வ மாஅஷ்ரர்த்து வ மா அஃலன்து வ மா அஷ்ரஃப்த்து வமா அந்த அஃலமு பிஹீமின்னீ அந்தல் முகத்திமு வஅந்தல் முஅஹ்ஹிரு லாஇலாஹ இல்லாஅந்த சுப்ஹானக்க இன்னீகுந்த்து மினல்லாலிமீன்.

அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக்க மின் அதா(B)பில் க(B)ப்ரி, வமின் அதா(B)பின்னாரி, வமின் ஃபித்னதில் மஹ்யா வல் மமாத்தி, வமின் ஃபித்னத்தில் மஸீஹித் தஜ்ஜாலி, அல்லாஹும்ம இன்னீ லலம்த்து நஃப்ஸீ லுல்மன் கதீரன் கபீரன் வலா யஃபிருத்துனூப்ப இல்லா அந்த்த பஃபிர்லீ மஃபிரத்தின் மின் இந்திக்க வர்ஹம்னீ இன்னக்க அந்த்தல் கபூருர் ரஹீம்.


கருத்து: ''யா அல்லாஹ்! நான் முற்படுத்தியும், பிற்படுத்தியும், மறைந்ததையும், பகிரங்கப் படுத்தியதையும், நான் அளவின்றி செய்ததையும், என்னைவிட எதைப்பற்றியெல்லாம் நீ மிகத் தெரிந்தவனாக இருக்கின்றாயோ, அவை அனைத்தையும் எனக்காக மன்னித்தருள்வாயாக. வணக்கத்திற்குரியவன் நீயன்று வேறு எவருமில்லை. நீ தூயவன்; நானோ பாவங்கள் செய்தவர்களுள் ஒருவனாக இருக்கின்றேன்.

யா அல்லாஹ்! நான் நிச்சயமாக கப்ரின் வேதனையிலிருந்து உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். நரக நெருப்பின் அதாபிலிருந்தும், வாழ்விலும்

சாவிலும் ஏற்படும் குழப்பங்களிலிருந்தும், மஸீஹுத் தஜ்ஜாலின் குழப்பங்களிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

யா அல்லாஹ்! நான் எனக்கே பாரிய தீங்குகளை இழைத்துக் கொண்டேன். எனவே, உனது பாரிய கருணையின் மூலம் எனது தவறுகளை மன்னித்தருள்வாயாக. இன்னும், உனது கருணையை என்மீது சொரிவாயாக. ஏனெனில், நீயேதான் தவறுகளை மன்னிப்பதுடன் கருணையை சொரிபவனாக இருக்கின்றாய்.

'I'



***பின்னர்***

السَّلَامُ عَلَيْكُمْ وَرَحْمَةُ اللَّهِ

**'அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்'**

என மொழிந்து I படத்தில் போல் தொழுகையை முடிக்க வேண்டும்.

கருத்து:அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் ரஹ்மத்தும் உங்கள் மீது உண்டாவதாக.

இந்த ஸலாத்தை,இருந்த இருப்பிலேயே இருந்து,முகத்தை மட்டும் முதலில் வலது பக்கமும் அடுத்து இடது பக்கமும் திருப்பி மொழிய வேண்டும்.

**★★★★தொழுகை முடிந்தது.★★★★**

தொழுகையின் பின்னர் - இவற்றை ஓதவும்.

أَسْتَغْفِرُ اللَّهَ ○ أَسْتَغْفِرُ اللَّهَ ○ أَسْتَغْفِرُ اللَّهَ ○

**1. அஸ்தஃபிருல்லாஹ்**

03 முறை கூறவும். தொடர்ந்து:

اَللّٰهُمَّ أَنْتَ السَّلَامُ وَمِنْكَ السَّـلَامُ تَبَارَكْتَ يَـا ذَا الْجَلَالِ وَالإِكْرَامِ ○

**2. அல்லாஹும்ம அந்தஸ் ஸலாமு வமின்கஸ் ஸலாமு த(B)பாரக்த யாதல் ஜலாலி வல் இக்ராம்'**

எனவும் ஓதவும்.

***இவற்றின் கருத்து:***

1. யா அல்லாஹ்! எனக்குப் பாவ மன்னிப்பை அளிப்பாயாக.

2. யா அல்லாஹ்! நீ சாந்தி பெற்றவன். உன்னிடத்தில் தான் சாந்தியுண்டு. நீ பாக்கியம் உடையவனாக இருக்கின்றாய். சங்கையும் மகத்துவமும் உடையவனாகவும் இருக்கின்றாய்.

اَللّٰهُمَّ أَعِنِّي علىٰ ذِكْرِكَ وَشُكْرِكَ وَحُسْنِ عِبَادَتِكَ ٥

(ஒரு முறை)

**'அல்லாஹும்ம அஇன்னீ அலா திக்ரிக்க வஸுக்ரிக்க வஹுஸ்னி இ(B)பாதத்திக்'**

**கருத்து:** ''யா அல்லாஹ்! எல்லா வேளைகளிலும் உன் நினைவில் இருக்க எனக்கு உதவி புரிவாயாக. அத்துடன் மிகச் சரியான முறையில் உனக்கு நன்றி செலுத்தவும், வணங்கி வழிபடவும் எனக்கு உதவி புரிந்தருள்வாயாக.''

لَا إِلَٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيْرٌ

اَللّٰهُمَّ لَا مَانِعَ لِمَا أَعْطَيْتَ وَلَا مُعْطِيَ لِمَا مَنَعْتَ وَلَا يَنْفَعُ ذَا الْجَدِّ مِنْكَ اَلْجَدُّ.

(ஒரு முறை)

**லா இலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லா ஷரீக்கலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலாகுல்லி ஸைஇன் கதீர். அல்லாஹும்ம லா மாநிஅ லிமா அஃதய்த்த வலா முஃதிய லிமா மனஃத வலா யன்பஉ தல் ஜத்தி மின்கல் ஜத்து.**

**கருத்து:** வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறெவருமில்லை. அவன் தனித்தவன்; அவனுக்கு இணையில்லை; ஆட்சி அவனுக்குரியதே. அவன் சகலவற்றின் மீதும் ஆற்றல் உடையவனாக இருக்கின்றான். யா அல்லாஹ்! நீ கொடுத்ததை யாராலும் தடுக்க முடியாது. நீ தடுத்ததை யாராலும் கொடுக்கவும் முடியாது. செல்வந்தனின் செல்வம் உன் வேதனையிலிருந்து அவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அவனுக்குப் பயனளிக்கா.

| | | |
|---|---|---|
| **சுப்ஹானல்லஹ்** | سُبْحَانَ اللّٰهِ | 33 முறை |
| **அல்ஹம்துலில்லாஹ்** | اَلْحَمْدُ لِلّٰهِ | 33 முறை |
| **அல்லாஹு அக்(B)பர்** | اَللّٰهُ أَكْبَرُ | 33 முறை |

لا إله إِلَّا اللهُ وَحْدَهَ لا شَرِيكَ لَهُ

لَهُ المُلْكُ وله الحَمْدُ وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ قَدِير

(ஒரு முறை)

**லா இலாஹ இல்லல்லாஹு வஹதஹு லா ஷரீக்கலஹு லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலாகுல்லி ஸைஇன் கதீர்.**

இதனைத் தொடர்ந்து தமக்குத் தேவையானவற்றை பிரார்த்தனையாக அல்லாஹ்விடம் சமர்ப்பிக்க முடியும்.

* * * * * * * * * * *

# ஜும்ஆ தொழுகை

ஜும்ஆ தொழுகை ஒரு பர்ளான - கட்டாயக் கடமையான - வணக்கமாகும். வாரத்திற்கு ஒரு முறை வெள்ளிக் கிழமையில் வரும் இவ்வணக்கம், குத்பா எனும் உரையையும் கொண்டிருக்கின்றது.

இஸ்லாமிய சமூக அமைப்பில் ஜும்ஆ தொழுகைக்கு உரிய இடம் தனியானது; சிறப்பானது. ஒரு வார காலம் ஆங்காங்கே பள்ளிவாயல்களிலும் திறந்த வெளிகளிலும் இன்னும் பல இடங்களிலும் ஐவேளை தொழுது வந்த மக்களை ஜும்ஆ தொழுகையானது ஓரிடத்திற்குத் திரட்டி எடுக்கின்றது.

அவ்வாறு திரட்டப்பட்ட மக்கள் மத்தியில் குத்பா உரை நிகழ்த்தப் படுகின்றது. அவ்வுரையில் ஆழ்ந்த இஸ்லாமிய கருத்துக்கள் இடம் பெறுகின்றன. அல்லாஹ்வைப் பற்றி, அவன் தூதர் பற்றி, அவன் தந்த வாழ்க்கை முறையின் அவசியம் பற்றி, முஸ்லிம்களின் எழுச்சி, வீழ்ச்சி, ஒற்றுமை என்பன பற்றியெல்லாம் எடுத்துரைக்கப் படுகின்றது.

இவ்வாறு உணர்வு பெற்ற மக்கள் இறுதியில் தமது இருகரம் ஏந்தி இறைவனிடம் தமது தேவைகளையிட்டு பிரார்த்தனை புரிந்தவர்களாக ஜும்ஆ தொழுகையை நிறைவேற்றுகின்றனர்.

வாராவாரம் நடைபெறும் இவ்வற்புத வணக்கம் - ஜும்ஆ தொழுகை இரண்டு ரக்அத்களைக் கொண்டது. பெண்கள், அடிமைகள், சிறுவர் சிறுமியர், கடுமையாக நோய்வாய்ப் பட்டவர்கள், பிரயாணிகள் ஆகியோர்களைத் தவிர்த்து மற்ற எல்லா முஸ்லிம்கள் மீதும் இது கட்டாயக் கடமையாக்கப் பட்டுள்ளது.

கடமையில்லாதவர்கள் ஜும்ஆ தொழுதால் அதற்கான நற்கூலி அவர்களுக்கு உண்டு. அல்லாத பட்சத்தில் அவர்கள் ளுஹர் தொழுவது கட்டாயமாகும்.

ஜும்ஆ தொழுகை கடமையானவர்கள் தகுந்த காரணமின்றி அதை நிறைவேற்றாது இருப்பது பெரும் பாவமாகும். ரஸூல் (ஸல்)அவர்கள் அத்தகையவர்களைக் கடுமையாகக் கண்டித்துள்ளார்கள்.

அவர்கள் மொழிந்தார்கள்:

**''தொழுகையை முன்னின்று நடத்துவதற்கு யாரையேனும் நியமித்து விட்டு, ஜும்ஆ தொழுகைக்கு வராதவர்கள் இல்லங்களுக்கு நானே சென்று அங்குள்ளோர் இருக்கும்பொழுதே அவ்வில்லங்களுக்கு தீ வைக்க விழைகின்றேன்.''**

-ஆதாரம்: முஸ்லிம், அஹ்மத்

மற்றொரு முறை மொழிந்தார்கள்:

**''யாரேனும் ஒருவர் தொடராக மூன்று ஜும்ஆக்களைத் தவற விட்டால், அல்லாஹ் அவரது உள்ளத்தில் முத்திரையிட்டு விடுகின்றான்.''**

-ஆதாரம்: அஹ்மத், திர்மிதீ, அபூதாவூத்.

## ஜும்ஆவும் சுத்தமும்

ஜும்ஆ தினத்தன்று ஒரு முஸ்லிம் தம்மை நன்கு சுத்தமாக வைத்துக் கொள்வது மிக அவசியம் என்பது பற்றி ரஸூல் (ஸல்) அவர்கள் வெகுவாக மொழிந்துள்ளார்கள். இயல்பாகவே ஒரு முஸ்லிம் சுத்தமாக இருப்பது மிக அவசியம். அடுத்து, பெரும் சனத்திரள் சேரும் ஓர் இடத்தில் அப்படி இருப்பது அதிலும் அவசியம் என்பதை எவரும் ஏற்பர்.

ரஸூல் (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள்:

**''ஜும்ஆ தினத்தன்று பருவம் எய்திய ஒவ்வொருவர் மீதும் குளிப்பதும், மிஸ்வாக் செய்(பல் துலக்கு)வதும், இயன்ற அளவு நறுமணம் பூசிக் கொள்வதும் கடமையாகும்''.**

-ஆதாரம்: அபூதாவூத்

அவர்கள் விளக்கமாகவே இவ்வாறு மொழிந்தார்கள்:

**''ஒருவர் வெள்ளிக்கிழமையன்று குளித்து, தன்னைப் பூரணமாகச் சுத்தம் செய்து, எண்ணெய் தேய்த்து, நறுமணம் பூசி, பின்னர் நேரங்காலத்தோடு பள்ளிவாயலுக்கு வந்து, மற்றவர்களைத் தள்ளாமலும் தொல்லைப் படுத்தாமலும் (இருத்தல் வேண்டும்). பின்னர் அவர் (ஸுன்னத்தான தொழுகைகளை) தொழுது, அமைதியாக உட்கார்ந்து குத்பாவை செவிதாழ்த்திக் கேட்பாராயின், அந்த ஜும்ஆவுக்கும் அடுத்த ஜும்ஆவுக்கும் இடையிலான அவரது பாவங்கள் மன்னிக்கப்படும்.''**

-ஆதாரம்: புகாரி

## ஜும்ஆவுக்கு நேரங்காலத்துடன் செல்தல்

மேற்கண்ட முறைப்படி தம்மை சுத்தப் படுத்திக் கொண்ட ஒருவர் நேரங்காலத்துடன் ஜும்ஆவுக்குச் செல்வது ரஸூல்(ஸல்) அவர்கள் விரும்பி, நற்போதனைப் புரிந்த நற்செயலாகும்.

ரஸூல்(ஸல்) அவர்கள் மொழிந்ததாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கும் ஒரு நபிமொழி கூறுவதாவது:

**''வெள்ளிக் கிழமையில் மலக்குகள் பள்ளிவாயல் கதவருகே வந்திருந்து ஜும்ஆ தொழுகைக்கென வருபவர்களின் பெயர்களை வரிசை முறைப்படி பதிந்து கொள்வர். பள்ளிக்குள் வரும் முதலாவது குழுவினர் ஓர் ஒட்டகத்தை குர்பான் கொடுத்த நன்மையைப் பெறுவர்; அவர்களை அடுத்து பள்ளிக்குள் வருபவர்கள் ஒரு மாட்டை குர்பான் கொடுத்த நன்மையைப் பெறுவர்; அவர்களை அடுத்து பள்ளிக்குள் வருபவர்கள் செம்மறி ஆடொன்றை குர்பான் கொடுத்த நன்மையைப் பெறுவதுடன் அடுத்தடுத்து வருபவர்கள் முறையே ஒரு கோழி, ஒரு முட்டையின் அளவு நன்மை பெறுவர். இவ்வாறு அவரவர் பள்ளிக்குள் வருவதை வைத்து தரம் பிரிக்கப் படுகின்றது. இமாம் குத்பாவுக்காக வந்தமரும்வரை இப்படி பள்ளிக்குள் வருவோரின் பெயர்களை குறித்து வரும் மலக்குகள் பின்னர் தமது பதிவேடுகளை மூடி வைத்து விட்டு குத்பாவுக்கு செவிமடுக்கவென்று அமர்ந்து விடுகின்றனர்.''**

-ஆதாரம்: புகாரி, முஸ்லிம்

எனவே, வெள்ளிக் கிழமையன்று முஸ்லிம்கள் முடிந்த அளவு நேரங்காலத்துடன் பள்ளிவாயலுக்குச் செல்ல வேண்டும். தம்மால் முடிந்த அளவு நஃபிலான தொழுகை தொழுதபின், இமாம் குத்பா உரை நிகழ்த்த வந்தமரும் வரை அல்குர்ஆன் ஓதுதல், அல்லாஹ்வை நினைவு கூறுதல், அவனைத் துதித்தல், நபி(ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து மொழிதல் என்பனவற்றில் ஈடுபடுதல் ஏற்றமானது; இவற்றிற்கு நபிமொழிகளில் ஆதாரம் உண்டு.

## குத்பாவை செவிமடுத்தல்

குத்பா உரை ஆரம்பமானவுடன் பள்ளிவாயலினுள் அமர்ந்திருப்போர் அனைவரும் அமைதியாக, காது தாழ்த்தி அதை செவிமடுக்க வேண்டும்; 'வாழ்வில் கொண்டுவர வேண்டும்' என்ற உணர்வுடன் மிகுந்த ஆர்வத்துடனும், அவதானத்துடனும் அதைக் கேட்க வேண்டும். குத்பா உரை நிகழ்த்தப்படும் வேளையில் யாரேனும் பள்ளிவாயலுக்கு வந்தால், அவர் இரண்டு ரக்அத் நஃபில் தொழுதுவிட்டு, குத்பாவை செவிமடுக்க வேண்டும்.

ரஸூல் (ஸல்) அவர்கள் குத்பா உரை நிகழ்த்தும்போது மொழிந்ததாக ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

**''இமாம் குத்பா உரை நிகழ்த்தும்போது யாரேனும் ஜும்ஆ தொழுகைக்கென சென்றால், அவர் இரண்டு ரக்அத் (நஃபில்) தொழ வேண்டும்; அதை நீட்டக் கூடாது.''**

-ஆதாரம்: முஸ்லிம்

ஜாபிர்(ரலி) அவர்கள் அறிவிக்கும் மற்றொரு நபிமொழி இவ்வாறு கூறுகின்றது:

''ஒரு முறை ரஸூல் (ஸல்) அவர்கள் குத்பா உரை நிகழ்த்தும்போது ஒருவர் ஜும்ஆவுக்கென பள்ளிவாயலுக்கு வந்தார். அல்லாஹ்வின்

**தூதர்(ஸல்) அவர்கள் அவரை விளித்து ''நீர் தொழுதீரா?'' எனக் கேட்டார்கள். அவர் ''இல்லை!'' என பதிலளித்தார். அதைக் கேட்ட ரஸூல் (ஸல்) அவர்கள் ''எழுந்து தொழும்!'' என்றார்கள்.''**

-ஆதாரம்: புகாரி, முஸ்லிம், அபூதாவூத், திர்மிதீ

அபூ கதாதா(ரலி) அவர்கள் அறிவிக்கும் மற்றொரு நபிமொழி இவ்வாறு மொழிகின்றது.

**''எப்பொழுதேனும் உங்களுள் ஒருவர் பள்ளிவாயலினுள் நுழைந்தால் அவர் இரண்டு ரக்அத் தொழாமல் அமரக் கூடாது' என ரஸூல் (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள்.''**

ஆதாரம்: புகாரி, முஸ்லிம்

## ஜும்ஆ தொழுகை

குத்பா உரை நிகழ்த்தி முடிந்த பின்னர் ஜும்ஆ தொழுகை ஆரம்பமாகின்றது. இது இரண்டு ரக்அத்களைக் கொண்ட ஃபர்ளான-கட்டாயக் கடமையான தொழுகையாகும்.

யாரேனும் ஒருவர் ஜும்ஆ தொழுகையின் ஒரு ரக்அத் தொழுது முடிந்த நிலையில் பள்ளிவாயலினுள் வந்தால் அவர் ஒரு ரக்அத்தை இமாமுடன் சேர்ந்து தொழவேண்டும். பின்னர் இமாம் ஸலாம் கொடுத்ததுடன் எழுந்து மற்ற ரக்அத்தைத் தொழுது அதைப் பூரணப் படுத்த வேண்டும்.

யாரேனும் ஜும்ஆ தொழுகையின் இரண்டு ரக்அத்தும் தொழுது முடிந்த நிலையில் பள்ளி வாயலுக்கு வந்தால், அவர் ளுஹர் தொழுதல் அவசியம். ளுஹருக்கு நான்கு ரக்அத் உண்டு என்பது யாவரும் அறிந்ததே. இவர் ஜும்ஆ தொழுகையை விட்டுவிட்ட குற்றத்திற்கு ஆளாகின்றார் என்பதை உணர்தல் அவசியம்.

## ஃபர்ளுக்குப் பின் ஸுன்னத்

ஜும்ஆ தொழுகைக்குப் பின் சுன்னத்தான தொழுகை இரண்டு, நான்கு, அல்லது ஆறு ரக்அத் தொழுவது ரஸூல் (ஸல்) அவர்களது ஸுன்னாவைச் சார்ந்த செயலாகும்.

இது தொடர்பாக வந்துள்ள நபிமொழிகள் வருமாறு:

இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

**''ரஸூல் (ஸல்) அவர்கள் ஜும்ஆ தொழுகைக்குப்பின் (தமது) இல்லம் போகும் வரை (வேறு எத்தகைய தொழுகையும்) தொழவில்லை. (தமதில்லம்) போனபின் இரண்டு ரக்அத் தொழுதார்கள்.''**

-ஆதாரம்: புகாரி, முஸ்லிம்

அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

**''உங்களுள் யாரேனும் ஒருவர் ஜும்ஆ தொழுகைக்குப் பின் தொழுவதற்கு முற்படுவாராயின், அவர் நான்கு ரக்அத்கள் தொழ வேண்டும்.''**

-ஆதாராம்: முஸ்லிம்

அதாஅ அறிவிக்கின்றார்கள்:

**''அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்கள் எப்பொழுதாவது மக்காவில் ஜும்ஆ தொழுதால், (தாம் தொழுத இடத்திலிருந்து) சற்று முன்னே நகர்ந்து இரண்டு ரக்அத் தொழுவார்கள்; பிறகு, இன்னும் சற்று முன்னே நகர்ந்து நான்கு ரக்அத் தொழுவார்கள். அவர்கள் எப்பொழுதாவது மதீனாவில் ஜும்ஆ தொழுதால், அதன் பின், வீடு செல்லும் வரை பள்ளிவாயலில் தொழ மாட்டார்கள்; வீட்டில் இரண்டு ரக்அத் தொழுவார்கள். இதுபற்றி, ''ஜும்ஆவுக்குப் பின் பள்ளிவாயலில் ஏன் தொழவில்லை'' என்று அவர்களிடம் வினவியபோது, ''இதுதான் ரஸூல் (ஸல்) அவர்களின் நடைமுறை'' என்று பதிலளித்தார்கள்.''**

இவை யாவற்றிலுமிருந்து ஜும்ஆ தொழுகைக்குப்பின் சுன்னத்தான தொழுகை தொழுவதன் அவசியம் தெளிவாக விளங்கிக் கொள்ள முடிகின்றது.

இது வரை நாம் எடுத்தியம்பிய ஜும்ஆ தொழுகை சார்ந்த அத்தனையையும் அதனதன் முக்கியத்துவம் அறிந்து கடைப்பிடிப்பது - இறை திருப்தியையும், ஈருலக ஈடேற்றத்தையும் பெற்றுக் கொள்ளும் மிகச் சிறந்த வழியாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

**''ஈமான் கொண்டவர்களே! ஜும்ஆ உடைய நாளில் தொழுகைக்காக நீங்கள் அழைக்கப்பட்டால், வியாபாரத்தை விட்டுவிட்டு, அல்லாஹ்வை தியானிக்க (பள்ளிவாயல்களுக்கு ) விரைந்து செல்லுங்கள். நீங்கள் அறிபவர்களாக இருப்பின் இதுவே உங்களுக்கு மிக மேலான நன்மையுடையதாகும். பின்னர், (ஜும்ஆ) தொழுகை நிறைவேற்றப்பட்டு விட்டதும், (பள்ளியிலிருந்து வெளிப்பட்டு) பூமியில் பரவிச் சென்று அல்லாஹ்வுடைய அருளைத் தேடிக் கொள்ளுங்கள். அன்றியும், நீங்கள் வெற்றியடையும் பொருட்டு, அல்லாஹ்வை அதிகமதிகம் தியானம் செய்யுங்கள்.''**

(அல் குர்ஆன் 62:9,10)

# ஜமாஅத்து (கூட்டு)த் தொழுகை

இப்பொழுது அனேகமான மனிதர்கள் தொழுகையை ஜமாஅத்தாக நிறைவேற்றுவதில் கவனயீனமாக இருப்பதையும், அதற்கென சிலர் (அறிஞர்கள்) ஃபத்வா கொடுத்திருப்பதையும், அவற்றை அவர்கள் ஆதாரமாகக் கொள்வதையும் நான் அறிகின்றேன். இது எத்தகைய பாதகமும் பயங்கரமுமானது என்று எடுத்துக்காட்டுவது என் கடமை.

அல்லாஹ் தஆலா தனது வேத நூலில் (அல்குர்ஆனில்) மேன்மைப்படுத்தி, அவனது கண்ணியமிக்க தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் உயிரென மதித்த எதனையும் எந்த முஸ்லிமும் அலட்சியப் படுத்த முடியாது; இலேசாக கணித்து பொடுபோக்காக விட்டுவிடவும் முடியாது. அல்லாஹ் அவனது வேத நூலில் அதிகமான இடங்களில் தொழுகையின் முக்கியத்துவம் பற்றியும், அதை ஒழுங்குற பாதுகாத்து ஜமாஅத்தாக நிறைவேற்றுவது பற்றியும் குறிப்பிடுகின்றான். அத்துடன், சோம்பல் காரணமாக அதை அலட்சியப் படுத்துவது நயவஞ்சகர்களின் பண்பு எனவும் குறிப்பிடுகின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

**''தொழுகைகளை (குறிப்பாக) நடுத்தொழுகையை பேணிக் கொள்ளுங்கள். (தொழுகையின் போது) அல்லாஹ்வின் முன்னிலையில் உள்ளச்சப் பாட்டுடன் நில்லுங்கள்.''**

(அல் குர்ஆன் 2:238)

தொழுகைக்கு முக்கியத்துவம் காட்டாதவனும், தனது சகோதரர்களுடன் சேர்ந்து ஜமாஅத்தாகத் தொழாதவனும், 'தொழுகையை கண்ணியப் படுத்துகின்றான்; பேணுகின்றான்' என எவ்வாறு கருத முடியும்?

அல்லாஹ் கூறுகின்றான்:

**''நீங்கள் தொழுகையை நிலைநாட்டி, ஸகாத்தையும் கொடுத்து, குனிந்து ருகூஃ செய்பவர்களுடன் நீங்களும் ருகூஃ செய்யுங்கள்.''**

(அல் குர்ஆன் 2: 43)

இக்குர்ஆன் வசனம் தொழுபவர்களுடன் சேர்ந்து (ஜமாஅத்தாக) கூட்டாக தொழுவதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது. தொழுகையைக் கடைப்பிடிப்பது மாத்திரம்தான் கடமையென்றால் இவ்வசனத்தின் இறுதியில் 'ருகூஃ செய்பவர்களுடன் சேர்ந்து ருகூஃ செய்யுங்கள்' என்ற சொற்றொடர்

---

தொழுகையை ஜமாஅத்தாக நிறைவேற்றுவதன் அவசியம் பற்றி அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் இப்னு அப்துல்லாஹ் இப்னு பாஸ் அவர்கள் அளித்த (ஃபத்வா) தீர்ப்பு

வந்திருக்கத் தேவையில்லை. ஏனெனில் இவ்வசனத்தின் ஆரம்பத்தில் அதைக் கடைப்பிடிப்பது பற்றி நன்கு கூறப்பட்டுள்ளது.

அல்லாஹ் மொழிகின்றான்:

**''(நபியே! போர் முனையில் ) அவர்களுடன் நீர் இருந்து அவர்களுக்குத் தொழவைக்க நீர் (இமாமாக) நின்றால் அவர்களில் ஒரு பிரிவினர் தம் ஆயுதங்களைத் தாங்கிக்கொண்டு உம்முடன் தொழட்டும். அவர்கள் உம்முடன் ஸஜ்தா செய்து (தொழுகையை) முடித்ததும் அவர்கள் (விலகிச்சென்று) உங்கள் பின்புறம் (உங்களைக் காத்து நிற்கட்டும்) அப்பொழுது தொழாமலிருந்த மற்றொரு பிரிவினர் வந்து உம்முடன் தொழட்டும். ஆயினும் அவர்களும் தங்கள் ஆயுதங்களைத் தாங்கிய வண்ணம் தங்களைப் பற்றி எச்சரிக்கையாய் இருக்கட்டும்.''**

(அல் குர்ஆன் 4:102)

அல்லாஹுதஆலா யுத்த காலத்திலும் தொழுகையைக் கூட்டாக நிறைவேற்றுவதை கடமையாக்கியுள்ளானென்றால் யுத்தம் இல்லாத அமைதியான சந்தர்ப்பத்தில் அதை எவ்வாறு கூட்டாக நிறைவேற்ற வேண்டும் என எண்ணிப்பார்த்தல் நல்லது. யாருக்கேனும் கூட்டுத் தொழுகையை விடுவதற்கு அனுமதி கொடுக்கப்படவேண்டும் என்றால் அது யுத்த காலத்தில், போர் முனையில், அணியில் இருப்போருக்கே கொடுக்கப்பட வேண்டும். ஏனெனில், அவர்கள் எதிரிகளின் தாக்குதல்களை எதிர்நோக்கி அச்சுறுத்தலான நிலையில் இருக்கின்றனர். எனவே, அத்தகைய பயங்கர நிலையில் இருக்கும் அவர்களுக்கே அச்சலுகை வழங்கப்படாதது தொழுகையை கூட்டாகவே தொழ வேண்டும் என்பதன் அவசியத்தை வெகுவாக வலியுறுத்துகின்றது. ஆதலால் எவருக்கும் தொழுகையை கூட்டாக நிறைவேற்றுவதை விட்டும் பின்வாங்க முடியாது.

நபி(ஸல்) அவர்கள் மொழிந்ததாக அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

**''நான் ஒருவரைச் சாட்டி, தொழுகைக்காக இகாமத் கூறப்பட்டு, மனிதர்களை தொழுவிப்பதற்காகவும் ஒருவரை ஏற்பாடு செய்த பின், விறகுக் கட்டுகளுடன் சில மனிதர்ளையும் அழைத்துக்கொண்டு போய், தொழுகைக்கு சமூகந்தராத கூட்டத்தினரின் வீடுகளை எரித்து விடுவதற்கு உறுதி பூண்டுள்ளேன்.''**

-ஆதாரம்: புகாரி, முஸ்லிம்

மேலும், அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி)அவர்கள் கூறுகின்றார்கள் :

**''நீர் எங்களிடத்தில் நோயாளியையும் பகிரங்கமான நயவஞ்சகனையும் தவிர வேறு யாரும் தொழுகைக்குப் பின்வாங்குவதில்லை என்பதைப் பார்ப்பீர். நோயாளியும் (சில வேளை) இரண்டு மனிதர்களுக்கிடையில் (தொங்கிய நிலையில்) தொழுகைக்கு வருவதைக்**

கவனித்திருப்பீர். நிச்சயமாக ரஸூல் (ஸல்) அவர்கள் எமக்கு நேரான வழியையே கற்றுத் தந்தார். 'அதான்' ஒலிக்கக் கூடிய மஸ்ஜித்களில் தொழுகையை (கூட்டாக) நிறைவேற்றுவது (அந்த) நேர்வழி சார்ந்ததே.''

-ஆதாரம்: முஸ்லிம்

மேலும், அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

''எவர் நாளை (மறுமையில் ) பூரண முஸ்லிமாக அல்லாஹ்வை சந்திக்க விரும்புகிறாரோ அவர் தொழுகைகளை அதற்காக அழைக்கப்படும் இடங்களில் பேணித் தொழுது வரட்டும். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் நபிக்கு நேரான பாதையையே அமைத்துக் கொடுத்தான். தொழுகையும் நேரான பாதையை சார்ந்ததாகும். தொழுகை விஷயத்தில் (சோம்பல் காட்டி) பின்தங்கக் கூடியவனைப் போன்று நீங்களும் தொழுகைகளை வீடுகளில் நிறைவேற்றினால் நீங்கள் உங்கள் நபியுடைய வழிமுறையை விட்டு விட்டீர்கள் (என்பது பொருளாகும்). நீங்கள் உங்கள் நபியின் ஸுன்னாவை விட்டு விட்டால் வழி தவறி விட்டீர்கள் (என்பது பொருளாகும்). எந்தவொரு மனிதரும் அழகுற வுளூஉ (சுத்தம்)செய்து, மஸ்ஜித்களுள் (ஏதேனும்) ஒன்றுக்குச் செல்வாரேல், அவர் நடந்து செல்லும் ஒவ்வொரு எட்டுக்கும் அல்லாஹ் ஒரு நன்மையை எழுதுகிறான். (மறுமையில்) அவரின் ஒரு அந்தஸ்தை உயர்த்துகிறான். ஒரு பாவத்தை அழிக்கின்றான். எம்மிடத்தில் நயவஞ்சகனைத் தவிர வேறு எவரும் தொழுகை விஷயத்தில் பின்வாங்க மாட்டார்கள். சிலர் இருவரின் உதவியுடன் தொழுகைக்குக் கொண்டுவரப்பட்டு ஸஃப்ஃபில் நிறுத்தப் படுவார்.''

-ஆதாரம்: முஸ்லிம்

மேலும், அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

''ஒரு குருடர் நபி(ஸல்) அவர்களை அணுகி, 'யா ரஸூலுல்லாஹ்! என்னைப் பள்ளிக்கு அழைத்து வர யாருமில்லை. (எனவே) என் வீட்டில் தொழுவதற்கு எனக்கு சலுகை உண்டா?' எனக் கேட்டார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், 'நீர் தொழுகைக்கு அழைப்பு விடுக்கப்படுவதை (அதானை) செவிமடுக்கிறீரா?' எனக் கேட்டார்கள். அதற்கு அவர் 'ஆம்' என்று கூறவே, 'அவ்வாறாயின் நீர் கட்டாயம் பள்ளிக்கு வர வேண்டும் என நபிகளார் கூறினார்கள்.''

-ஆதாரம் : முஸ்லிம்

இவ்வாறு தொழுகையை கூட்டாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தையும், அல்லாஹ்வைப் புகழ்ந்து மேன்மைப்படுத்த உத்தரவாதமளித்த இறையில்லங்களில் அவற்றை நிறைவேற்றுவதன் அவசியத்தையும் வலியுறுத்தும் ஹதீஸ்கள் ஏராளமுண்டு.

எனவே, அல்லாஹ்வினதும் அவன் தூதரினதும் கட்டளைக்கு அடிபணிந்து ஒவ்வொரு முஸ்லிமும் மிகுந்த அக்கறையுடன் செயற்பட வேண்டும். இது பற்றி தம் பிள்ளைகள், குடும்பத்தவர்கள், அக்கம் பக்கத்தவர்கள், ஏனைய முஸ்லிம் சகோதரர்கள் ஆகியோருக்கு போதனைப் புரிவதும் அவசியம். மேலும், அல்லாஹ்வும் அவன் தூதரும் தடுத்தவற்றிலிருந்து ஒதுங்கி நிற்பதுடன், தொழுகையில் சோம்பல் காட்டுவதையும் தவிர்க்க வேண்டும். இவ்விழி செயல் அல்லாஹ் இழிவாக வர்ணித்த நயவஞ்சகர்களின் செயல்களுக்கு ஒப்பானதாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

**''நிச்சயமாக இந்நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை வஞ்சிக்க நினைக்கின்றனர். ஆனால், அவன் அவர்களை வஞ்சித்து விடுவான்; தொழுகைக்கு அவர்கள் தயாராகும்பொழுது சோம்பலுடையோராகவே நிற்கின்றார்கள். மனிதர்களுக்குத் (தங்களையும் தொழுகையாளியாக்கி) காண்பிப்பதற்காக (நிற்கிறார்கள்). இன்னும் மிகச் சொற்ப அளவேயன்றி அவர்கள் அல்லாஹ்வை நினைவு கூர்வதில்லை. இந்த முனாஃபிக்குகள் முஃமின்களின் பக்கமுமில்லை, காஃபிர்களின் பக்கமுமில்லை; இரு பிரிவினர்களுக்கிடையே தத்தளித்துக்கொண்டு இருக்கிறார்கள்; அல்லாஹ் எவரை வழிதவறச் செய்துவிட்டானோ, அவருக்கு (நபியே!) யாதொரு வழியையும் நீர் காண மாட்டீர்.''**

(அல் குர்ஆன் 4:142, 143)

தொழுகையைக் கூட்டாக நிறைவேற்றுவதை விட்டும் பின்வாங்குவது அதைப் பூரணமாக விடுவதற்குத் தூண்டக்கூடிய காரணங்களுள் ஒன்றாகும். 'தொழுகையை விடுவது குஃப்ர்' எனும் இறை நிராகரிப்பும், வழிகேடும் இதனால் ஏற்படும். அத்துடன் இஸ்லாமிய வட்டத்தின் உறவும் அறுந்துவிடும்.

ரஸூல் (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள்:

**''ஒரு மனிதனுக்கும் (இறைவிசுவாசத்திற்கும்) இறை நிராகரிப்புக்கும், (அல்லாஹ்வுக்கு) இணைவைப்பதற்கும் இடையில் உள்ள வேறுபாடு தொழுகையை விடுவதாகும்.''**

-ஆதாரம்; முஸ்லிம்

மேலும், நபி(ஸல்) அவர்கள் மொழிந்தார்கள்:

**''எமக்கும் அவர்களுக்கும் இடையிலான உடன்படிக்கை தொழுகையாகும். எவர் அதை விட்டாரோ அவர் (அந்த உடன்படிக்கையை) மறுத்தவராக மாறிவிட்டார்.''**

இவ்வாறு தொழுகையை மகத்துவப்படுத்தி, அதைப் பேணி கடைப்பிடித்து வருவது பற்றி ஏராளமான குர்ஆன் வசனங்களும், நபிமொழிகளும் வந்துள்ளன. (இஸ்லாத்தில்) எப்பொழுது ஓர் உண்மை

தெளிவாகி, அதற்குத் தகுந்த ஆதாரங்களும் விளக்கமாகக் கிடைக்கின்றதோ, அப்பொழுது எவரது கூற்றுக்காகவும் அதைப் புறக்கணித்தல் எவருக்கும் ஆகாது.

அல்லாஹ் அருள்பாலிக்கின்றான்:

**''உங்களில் ஏதாவது ஒரு விஷயத்தில் பிணக்கு ஏற்படுமானால் - மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புபவர்களாக இருப்பின் - அதை அல்லாஹ்விடமும், (அவன்) தூதரிடமும் ஒப்படைத்து விடுங்கள். - இதுதான் (உங்களுக்கு) மிகவும் சிறப்பான , அழகான முடிவாக இருக்கும்.''**

(அல் குர்ஆன் 4:59)

இன்னும் கூறுகின்றான்:

**''ஆகவே, எவர் அவருடைய (தூதருடைய) கட்டளைக்கு மாறு செய்கிறாரோ அவர்கள் தங்களைச் சோதனை பிடித்துக் கொள்வதையோ, அல்லது தங்களை நோவினைத் தரும் வேதனை பிடித்துக் கொள்வதையோ அஞ்சிக் கொள்ளட்டும்.''**

(அல் குர்ஆன் 24: 63)

கூட்டுத் தொழுகையில் அதிக பயன்களும் பொது நன்மைகளும் அமைந்திருப்பதை எவரும் மறைத்துவிட முடியாது. அவற்றுள் குறிப்பாக ஒருவருக்கொருவரது அறிமுகம், இறையச்சம் , நல்லனவற்றில் ஒருவருக்கொருவர் உதவுதல், இஸ்லாத்தின் உண்மையை ஒருவருக்கொருவர் உபதேசித்து, பொறுமையாக இருப்பனவும் அடங்கும். அத்துடன், தொழுகையில் பின்வாங்குபவனை அதைத் தவிர்த்து தொழுகையைக் கடைப்பிடிக்க உற்சாகப் படுத்துவது, அறியாமையில் உள்ளோருக்குக் கற்றுக் கொடுப்பது, நயவஞ்சகர்களைக் கண்டித்து அவர்களை விட்டு விலகுவதும் உண்டு. மேலும், அல்லாஹ்வின் மேன்மையை எடுத்துரைத்து தமது சொல் செயல் மூலம் மக்களை அழைப்பதும் இடம் பெறும். இவையல்லாத இன்னும் பல பயன்கள் கூட்டுத் தொழுகையில் உண்டு.

எல்லாம் வல்ல அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அவனது திருப்பொருத்தத்தை அருளி இவ்வுலகிலும் மறுமையிலும் சீரான வாழ்வைத் தருவானாக! தீய, பாவங்களில் இருந்து எம்மைப் பாதுகாப்பானாக! நயவஞ்சகர்கள் இறைநிராகரிப்பாளர்கள் ஆகியவர்களுக்கு இணையாவதில் இருந்து எம்மைப் பாதுகாப்பானாக! நிச்சயமாக அவன் சிறந்த கொடையாளனும் சங்கை மிக்கவனுமாவான். எம் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தவர், தோழர்கள் மீதும் அல்லாஹ் அருள் புரிவானாக!

# كتاب الصلاة

## باللغة التاميلية

تأليف

شريف الدين محمد منصور

حقوق الطبع ميسرة لكل مسلم يريد توزيعه لوجه الله أما من أراد
بيعه فعليه الإتصال بالمكتب هاتف « ٤٣٣٠٨٨٨ (أربعة خطوط)

# المكتب التعاوني للدعوة والإرشاد
# وتوعية الجاليات بالبديعة

تحت إشراف وزارة الشؤون الإسلامية والأوقاف والدعوة والإرشاد

المملكة العربية السعودية - ص . ب ٢٤٩٣٢ - الرياض ١١٤٥٦

هاتف ٤٣٣٠٨٨٨-١-٩٦٦ + فاكس ٤٣٠١١٢٢-١-٩٦٦ +

## THE CO-OPERATIVE OFFICE
## FOR CALL & GUIDANCE AT AL-BADIAH

Under The Supervision of The Ministry of Islamic Affairs
Endowment Guidance & Propagation
Kingdom of Saudi Arabia P.O.Box 24932 Riyadh 11456
Tel +966-1-4330888 - Fax +966-1- 4301122



مطبعة دار طيبة - الرياض - ت: ٤٢٨٣٨٤٠